இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 266 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – சித்திரை 25 – வெள்ளிக்கிழமை 08 மே 2026 – மதுரை 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 266 : Thiruvalluvar Year - 2057 - Chithirai 25 - Friday 08 May 2026 - Madurai 8 Pages ₹ 5.00



## தி.மு.க. அரசின் நலத்திட்டங்களைத் தொடர வேண்டும்!

# விஜய் ஆட்சி அமைக்க தி.மு.க. குறுக்கே நிற்காது!

## ‘டைம்ஸ் ஆப் இந்தியா’வுக்கு - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் பேட்டி!

**சென்னை, மே 8–**


**“தமிழ்நாட்டில் விஜய் ஆட்சியமைக்க தி.மு.க. குறுக்கே நிற்காது” என்றும் “மக்கள் தீர்ப்பை ஏற்போம்” என்றும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார். “தி.மு.க. ஆட்சியின் திட்டங்களை புதிய அரசு தொடர வேண்டும்” என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.**



“டைம்ஸ் ஆஃப் இந்தியா “ஆங்கில நாளிதழுக்கு சிறப்புப் பேட்டியளித்துள்ள கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாட்டில் புதிய அரசு அமைக்கும் விவகாரத்தில் அரசியல மைப்புச் சிக்கலையோ, நெருக்கடியையோ ஏற்படுத்த விரும்பவில்லை என்று தெரிவித்துள்ளார். அதேபோல், உடனடியாக மீண்டும் ஒரு தேர்தல் வருவதையும் தாங்கள் விரும்பவில்லை என்றும் கூறியுள்ளார்.

தமிழ்நாட்டில் விஜய் ஆட்சியமைக்க தி.மு.க. எந்த இடையூறும் செய்யாது என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

மகளிர் உரிமைத்தொகை திட்டம் உள்ளிட்ட தி.மு.க. அரசு செயல்படுத்திய நலத்திட்டங்களை புதிய அரசு தொடர வேண்டும் என்றும் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்தியுள்ளார்.



### Let Vijay form govt, won't disturb for 6 months: Stalin

Arun.Ram@timesofindia.com

**Chennai:** DMK will wait for TVK leader C Joseph Vijay to form the govt, and "watch without disturbing for six months", outgoing chief minister **M K Stalin** told **TOI** on Wednesday.

Indicating that DMK doesn't want a constitutional crisis or another election soon, Stalin said he expects the new govt to continue the schemes introduced by school children," he said when asked what tops his priority list. "And 'Kalaignar magalir urimai thogai' (₹1,000 monthly allowance to women heads of households)."

When pointed out that Vijay had promised ₹2,500 to women, Stalin said it would be difficult to keep that promise. "Give them at least ₹1,000 as we did". His of Centre's control. "In this election too, we promised only those things we could deliver. I don't think TVK will be able to fulfill its promises (referring to six free LPG cylinders a year to each family of ration card holders)," he said, adding, "Senjaal magizhchi (we will be happy if they do)."

The DMK president had a steady stream of visitors – former ministers and party leaders, alliance partners and

புதிதாகப் பொறுப்பேற்கும் அரசு - பள்ளி மாணவ, மாணவிகளுக்கான காலை உணவுத் திட்டத்தை தடையின்றித் தொடர வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

தனது தலைமையிலான திராவிட மாடல் அரசு 90 சதவிகித தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றியுள்ளது என்றும், “நீட்” தேர்வு ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் உள்ளதால், அதனை ரத்து செய்ய முடியவில்லை என்றும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அப்பேட்டியில் குறிப்பிட்டுள்ளார் .

---

## சந்தர்ப்பவாதத்திற்குக் கொள்கை முகமூடி போடும் காங்கிரஸின் முயற்சி பல்லிளிக்கிறது!

# துரோகம் எங்களுக்குப் புதிதல்ல! காலம் பதில் சொல்லும்!

## கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. அறிக்கை!

**சென்னை, மே 8–**

**தி.மு.க. கூட்டணிக் கட்சி தொண்டர்களின் உழைப்பினால் வெற்றி பெற்ற காங்கிரஸ் கட்சி 5 சட்டமன்ற உறுப்பினர்களை பணயம் வைத்து கயமையுடன் மாற்று இடத்திற்கு சென்றுள்ளார்கள். ஏதோ ராஜதந்திர முடிவை எடுத்ததுபோல் சந்தர்ப்ப வாதத்திற்கு கொள்கை முகமூடி போடும் காங்கிரஸின் முயற்சி பல்லிளிக்கிறது. தி.மு.க.வுக்கு துரோகம் புதிதல்ல! அவை நிரந்தரமும் அல்ல என்பது எங்களுக்குப் புரியும்! காலம் பதில் சொல்லும் என கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி. விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.**

**இதுகுறித்து தி.மு.கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:**

அகில இந்திய காங்கிரஸ் கட்சி சார்பில் வெளியாகி இருக்கும் அறிக்கை, சில காலம் மறைந்திருந்த அவர்களின் குணத்தை வெளிக்காட்டியிருக்கிறது.

**காங்கிரஸ் செய்தியால் எங்களுக்கு திகைப்பில்லை!**

எப்போதெல்லாம் காங்கிரஸ் கட்சிக்கு இக்கட்டான சூழலும் நெருக்கடியும் உண்டானதோ, அப்போதெல்லாம் உற்றத் தோழமையாக உடனிருந்தது திராவிட முன்னேற்றக் கழகம். அதற்காக நாங்கள் கொடுத்த விலை அதிகம். ஆனால் அவற்றை



இன்முகத்தோடு ஏற்றோம்.

குறிப்பாக, அன்னை சோனியா காந்தி அவர்கள், மறைந்த முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் ஆகியோருடன் சிறந்ததொரு நட்புணர்வையும், தனிப்பட்ட முறையில் சகோதரர் ராகுல் காந்தி அவர்களுடன் பாசப்பிணைப்பையுமே காட்டி வந்தோம். அவரும், “நான் சகோதரர் என்று அழைக்கும் ஒரே அரசியல் தலைவர் ஸ்டாலின்தான்” என்றெல்லாம் சொல்லி வந்தார்.

இன்று அவை முறிந்துவிட்டதாக காங்கிரஸ் கூறி இருப்பதை செய்திகளில் பார்த்தபோது ஏனோ திகைப்பு ஏற்படவில்லை.

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி யில் பெரும்பான்மை இடங்களைப் பெற்று, தேர்தலைச் சந்தித்து, கூட்டணிக் கட்சித் தொண்டர்களின் உழைப்பால் வெற்றி பெற்ற 5 சட்டமன்ற உறுப்பினர் களைப் பணயம் வைத்து கயமையுடன் மாற்று அணிக்கு சென்றுள்ளார்கள்.

**பா.ஜ.க. செய்வதையே காங்கிரஸ் கட்சியும் செய்கிறது!**

ஏதோ பெரிய அரசியல் ராஜதந்திர முடிவை எடுத்தது போலவும் அதற்கு கொள்கை முலாம் பூசி நியாயப்படுத்த காங்கிரஸ் கட்சி முயற்சிக்கிறது. சந்தர்ப்பவாதத்துக்கு கொள்கை முகமூடி போடும் முயற்சி பல்லிளிக்கிறது. தி.மு.கழகம் தலைமையிலான ஆட்சி அமையும் என்று நம்பி வாக்களித்த மக்களுக்கு செய்த பச்சைத் துரோகம்.

குறுக்கு வழியில் அதிகாரத்தை அடைய பா.ஜ.க. பல மாநிலங்களில் எதைச் செய்கிறதோ, அதையே காங்கிரஸ் கட்சி தமிழ்நாட்டில் செய்திருக்கிறது.

காங்கிரஸ் கட்சி யாரை வேண்டுமானாலும் ஆதரிக்கட்டும். அது அவர்களது விருப்புரிமை. ஆனால் யாருக்கு ஆதர வளித்தாலும், வாக்களித்த மக்களுக்கு உண்மையாக இருப்பதே அரசியல் அறமாக இருக்கும்.

திரு. ராகுல்காந்தி அவர்களை பிரதமர் வேட்பாளராக அதிகாரபூர்வமாக முன்னிறுத்தி தேர்தலை சந்திக்க காங்கிரஸ் கட்சியே தயங்கிய நேரத்தில் 2019 தேர்தலில் சென்னையில் அவரை பிரதமர் வேட்பாளராக கழகத் தலைவர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்மொழிந்த நினைவுகள் என் நெஞ்சில் பசுமையாக நிழலாடுகின்றன.

> **“வாக்களித்த மக்களுக்கு உண்மையாக இருப்பதே அரசியல் அறமாக இருக்கும்!”**
>
> **காங்கிரஸ் கட்சி யாரை வேண்டுமானாலும் ஆதரிக்கட்டும். அது அவர்களது விருப்புரிமை. ஆனால் யாருக்கு ஆதரவளித்தாலும், வாக்களித்த மக்களுக்கு உண்மையாக இருப்பதே அரசியல் அறமாக இருக்கும்.**

**ராகுல் காந்தியை முன்னிறுத்திய தி.மு.க.!**

இரண்டு தேர்தல்களில் திரு ராகுல்காந்தி அவர்களை முன்னிறுத்தி, அபார வெற்றியை ஈட்டித் தந்து நாட்டிலேயே அதிக நாடாளுமன்ற உறுப்பினர்களை அனுப்பியது தி.மு.க. கூட்டணி. நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் கொள்கை ரீதியாகவும் உணர்வுபூர்வமாகவும் தோளோடு தோள் நின்ற இயக்கம் தி.மு.கழகம்.

தோல்வி எங்களுக்கு புதிதல்ல!

துரோகமும் எங்களுக்கு புதிது அல்ல!

ஆனால், அவை நிரந்தரம் அல்ல என்பதும் எங்களுக்கு தெரியும்!

காலம் பதில் சொல்லும்!

இவ்வாறு கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி., அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

---

## தேர்தல் ஆணையர்கள் நியமன விவகாரம்:

# உச்சநீதிமன்றம் விசாரணையை ஒத்திவைக்க மறுப்பு!

புதுடெல்லி, மே 8 -

தேர்தல் ஆணையர்கள் நியமன விவகாரம் வேறு எந்த விவகாரத்தையும்விட முக்கியத்துவம் வாய்ந்தது என்று உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது.

பிரதமர், மக்களவை எதிர்க் கட்சித் தலைவர், உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி ஆகியோர் அடங்கிய குழு அளிக்கும் பரிந்துரையின் அடிப்படையில், தேர்தல் ஆணையர்களை குடியரசுத் தலைவர் நியமிக்கவும், இந்த நடைமுறையை தேர்தல் ஆணையர்கள் நியமனம் தொடர்பாக நாடாளுமன்றம் இயற்றும் வரை பின்பற்றவும் கடந்த 2023ஆம் ஆண்டு மார்ச்சில் தேர்தல் ஆணையம் உத்தர விட்டது.

சட்டமன்றத்தைத் தொடர்ந்து அந்த ஆண்டு டிசம்பரில் தலைமைத் தேர்தல் ஆணையர் மற்றும் பிற தேர்தல் ஆணையர்கள் நியமன சட்ட மசோதாவை நாடாளுமன்றம் நிறைவேற்றியது. இந்த மசோதாவுக்கு குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளித்ததைத் தொடர்ந்து மசோதா சட்டமானது.

இந்தச் சட்டத்தின்கீழ், தேர்தல் ஆணையர்களைத் தேர்வு செய்யும்குழுவில் இருந்து உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி நீக்கப்பட்டார். இதற்கு எதிராக உச்சநீதி மன்றத்தில் ஜனநாயக சீர்திருத்தங்கள் சங்கம், லோக் பிரஹாரி ஆகிய தன்னார்வ அமைப்புகள் உள்பட பல்வேறு தரப்பினர் மனு தாக்கல் செய்துள்ளனர்.

இந்த மனுக்கள் மீதான விசாரணையை மற்றொரு நாளுக்கு ஒத்திவைக்க வேண்டும் என்று நீதிபதி தீபாங்கர் தத்தா, சதீஷ் சந்திர சர்மா ஆகியோர் அடங்கிய அமர்வில், ஒன்றிய அரசின் சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா புதன்கிழமை முறையிட்டார்.

ஆனால், வேறு எந்த விவகாரத்தையும்விட தேர்தல் ஆணையர்கள் நியமன விவகாரம் முக்கியமானது என்று தெரிவித்து, விசாரணையை ஒத்திவைக்க நீதிபதிகள் மறுத்து விட்டனர்.